DINATHANTHI 02 JUNE 09

## கைப்பந்து போட்டி

# அக்கரைகொடிவேரி அணி வெற்றி

கோபிசெட்டிபாளையம், ஜூன்.2–

கிராம புத்துணர்வு கோப்பைக்கான விளையாட்டு போட்டியின் கைப்பந்து போட்டியில் அக்கரை கொடிவேரி அணி வெற்றி பெற்றது.

### விளையாட்டு போட்டி

ஈஷா யோக மையத்தின் கிராம புத்துணர்வு இயக்கத்தின் 6–வது கிராம புத்துணர்வு சுழற்கோப்பைக்கான தகுதி போட்டிகள் கோபி அருகில் உள்ள முருகன்புதூர், காளியூர், அண்ணாநகர், வளையபாளையம், சரளை, மைக்கேல்பாளையம், சாவக்காட்டுபாளையம், மாக்கினாங்கோம்பை ஆகிய இடங்களில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கு எறிபந்து, ஆண்களுக்கு கைப்பந்து ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில் கால் இறுதிக்கு தகுதி பெற்ற அணிகளுக்கான போட்டிகள் மற்றும் அரையிறுதி, இறுதி போட்டிகள், கோபி பெரியார் மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டு போட்டிகளை கோபி துணை போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியம் தொடங்கி வைத்தார். அரையிறுதி போட்டியை மைராடா செயல் திட்ட அலுவலர் அழகேசன் தொடங்கி வைத்தார். கிராமிய விளையாட்டு போட்டிகளை கோபி ஆர்.டி.ஓ.மகேஸ்வரன் தொடங்கி வைத்தார்.

### கைப்பந்து போட்டி

பெண்களுக்கான எறிபந்து போட்டியின் இறுதி போட்டியில் முருகன்புதூர் அணியும், தொட்டிபாளையம் அணியும் மோதியது. இதில் முருகன்புதூர் அணி 25 புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான கைப்பந்து போட்டியில் பாரதிநகர் அணியும், சூரியம்பாளையம் அணியும் மோதியது. இதில் சூரியம்பாளையம் அணி 25 புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது.

வெளிப்புற ஆண்களுக்கான கைப்பந்து போட்டியில் அக்கரைகொடிவேரி அணியும், சாவக்காட்டுபாளையம் அணியும் மோதியது. இதில் அக்கரை கொடிவேரி அணி 27 புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது.

### பரிசளிப்பு விழா

இதைத்தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோபி சாரதா மெட்ரிக் பள்ளி செயலாளர் சீத்தாலட்சுமி, எல்.ஐ.சி.வளர்ச்சி அதிகாரி பச்சியப்பன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்.

மேலும் குழந்தைகளுக்கான விளையாட்டு, கிராமப் பாரம்பரிய விளையாட்டுகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களுக்கும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள், மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழாவையொட்டி கோவை ஈஷா சிறுவர்கள் கலைக்குழுவின் ஒயிலாட்டம், அந்தியூர் ஸ்ரீ வீர ஆஞ்சநேயா சிலம்ப கலைக்கூட மாணவ–மாணவிகளின் சிலம்பாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கோபி ஈஷா யோக மையம், கிராம புத்துணர்வு இயக்கத்தினர் செய்திருந்தனர்.